
## திராவிடத்தால் வாழ்கிறோம்

898

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

129





# ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்!

## உழவர் நலனுடன் சேர்ந்த ஊட்டச்சத்து!

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

தமிழ்நாட்டின் வேளாண்மை வளர்ச்சியில் மிகுந்த அக்கறையும், பொறுப்புணர்வும் கொண்டுள்ளது கழக அரசு. விவசாயிகளின் நலனைப் போற்றும் வகையில்தான் வேளாண்மைத் துறை என்ற பெயரினை 'வேளாண்மை உழவர் நலத்துறை' எனப் பெயர் மாற்றம் செய்தது திராவிட மாடல் அரசு. இந்தத் துறைக்கு என தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 5 நிதிநிலை அறிக்கைகளில் ஒரு லட்சத்து94 ஆயிரத்து 76 கோடி ரூபாயில் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது கழக அரசு.

வேளாண்மை வருமானத்தை உயர்த்திட, 'கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்', 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்திட, முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம். விவசாயிகள் தங்கள் விளைநிலங்களின் மண்வளத்தினை அறிந்திட, தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை உழவர் நலத்துறை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுடன், தமிழ்நாட்டின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்யவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் வகையிலும் 'ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்' என்னும் புதிய திட்டம் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள், சிறுதானியங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் வகையிலும் திட்டம் வடிவமைக்கப்பட்டு, இதற்கென ரூ.18 கோடியே 67 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குறிப்பாக, 'ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்' மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யும். வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும்.

அதற்கேற்ப தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் போன்ற காய்கறி விதைகள் அடங்கிய 15 இலட்சம் காய்கறி விதைத் தொகுப்புகள், விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய பழச்செடிகள் அடங்கிய 9 இலட்சம் பழச்செடி தொகுப்புகள் மற்றும் புரதச்சத்து நிறைந்த மரத்துவரை, காராமணி உள்ளிட்ட பயறு வகைகள் அடங்கிய ஒரு இலட்சம் பயறு வகை விதைத் தொகுப்புகள் ஆகியவை விவசாய மக்களுக்கு வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தினை கடந்த 4.7.2025 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்த முதலமைச்சர் அவர்கள், 5 பயனாளிகளுக்கு காய்கறி விதைத்தொகுப்புகள். பழச்செடித் தொகுப்புகள் மற்றும் பயறு வகைத் தொகுப்புகளை வழங்கி வாழ்த்தினார். முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தது முதல், தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் பெருவிருப்பத்துடன் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தில் பங்கெடுத்து வருகின்றனர்.

### புதிய வேளாண் கட்டடங்கள்

103 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 முதன்மை பதப்படுத்தும் மையங்கள், 18 சேமிப்புக் கிடங்குகள், 3 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 3 வேளாண் சந்தை நுண்ணறிவு ஆலோசனை மையங்கள், 8 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள், 10 துணை வேளாண் விரிவாக்க மையங்கள், 2 விதைச் சேமிப்புக் கிடங்குகள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், 2 ஒருங்கிணைந்த விதைச்சான்று வளாகங்கள், அலுவலகக் கட்டடம் - மாணவர் விடுதி மற்றும் தரக்கட்டுப்பாடு/ பகுப்பாய்வகம் உள்ளிட்ட 52 கட்டடங்களைத் திறந்து வைத்தார்.



> **உழவர் நலனுடன் ஊட்டச்சத்து இயக்கத்தையும் இணைத்து செயல்படுத்தும் புதுமையான முயற்சிக்குக் கிடைத்துள்ள வரவேற்புதான், அரசின் வெற்றிக்குச் சான்று.**

### விவரங்கள்

திருவண்ணாமலை மாவட்டம் - குப்பநத்தம் மற்றும் படவேடு ஆகிய இடங்களில் 8 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் 2 முதன்மை பதப்படுத்தும் மையங்கள்.

தென்காசி மாவட்டம் - சங்கரன்கோவில், பாவூர்சத்திரம், தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை, விளாத்திகுளம், ஸ்ரீவைகுண்டம். கரூர் மாவட்டம் கரூர், அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம், காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர், சுங்குவார்சத்திரம், திருப்பத்தூர் மாவட்டம் - திருப்பத்தூர். வேலூர் மாவட்டம் - குடியாத்தம் ஆகிய மாவட்டங்களில் 28 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 14 சேமிப்பு கிடங்குகள்.

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, நெகமம், காரமடை, மலையடிப்பாளையம் ஆகிய இடங்களில், விற்பனைக்கூட நிதியிலிருந்து 8 கோடி ரூபாய் செலவில் 1,000 டன் கொள்ளளவு கொண்ட 4 கிடங்குகள்.

தென்காசி மாவட்டம் - ஆலங்குளம், திருவண்ணாமலை மாவட்டம், ஆதமங்கலபுதூர் மற்றும் நாயுடுமங்கலம் ஆகிய இடங்களில் 14 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் 3 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

செங்கல்பட்டு, திருப்பத்தூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் 2 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் 3 வேளாண் சந்தை நுண்ணறிவு ஆலோசனை மையங்கள்.

அரியலூர் மாவட்டம் தா.பழூர், விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி. கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர், திருவண்ணாமலை மாவட்டம் - வந்தவாசி, கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் ஆகிய மாவட்டங்களில் 22 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம் - பழந்தண்டலம், களக்காட்டூர், தேனி மாவட்டம் தேவதானப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் அணைக்கரை, திருச்சிற்றம்பலம், சேதுபாவாசத்திரம், திருப்பூர் மாவட்டம் கோவிந்தாபுரம், அரியலூர் மாவட்டம் விக்கிரமங்கலம், தென்காசி மாவட்டம் அச்சன்புதூர், புதுக்கோட்டை மாவட்டம் - கீரமங்கலம் ஆகிய இடங்களில் 5 கோடி ரூபாய் செலவில் 10 துணை வேளாண் விரிவாக்க மையங்கள்.

### விரிவாக்க மையங்கள்

கடலூர் மாவட்டம் பண்ணை, மிராளூர் அரசு கள்ளக்குறிச்சி மாவட்டம் விதைப்பண்ணை, வடக்கனந்தல் அரசு விதைப்பண்ணை ஆகிய இடங்களில் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விதை சேமிப்புக் கிடங்குகள், மதுரை மாவட்டம் மேலூரில் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் உள்பட மேலும் சில கட்டடங்களையும் நம் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

உழவர் நலனுடன் ஊட்டச்சத்து இயக்கத்தையும் இணைத்து செயல்படுத்தும் புதுமையான முயற்சிக்குக் கிடைத்துள்ள வரவேற்புதான், அரசின் வெற்றிக்குச் சான்று.

...சாதனை தொடரும்



## வகுப்பறையில் உருவாகும் புரட்சி!

'பள்ளி வகுப்பறைகளில் மாணவர்கள் வரிசை வரிசையாக உட்கார வைக்கும் முறை மாற்றப்படும்' என தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை அறிவித்துள்ளது.

வகுப்பறைகளில், முதல் வரிசை, இரண்டாம் வரிசை, மூன்றாம் வரிசை எனத் தொடர்ந்து கடைசி வரிசையும் இருக்கும். படிப்பில் சிறப்பாக இருக்கும் மாணவர்கள் முன்வரிசையிலும், படிப்பில் பின்தங்கிய மாணவர்கள் கடைசி வரிசையிலும் அமரும் வழக்கத்தை மாற்றும் வகையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகைய வரிசை முறை மாணவர்கள் மத்தியில், வேறுபாடுகளை ஏற்படுத்தி விடுகிறது என கேரளாவில் வெளியான 'ஸ்தானார்த்தி ஸ்ரீகுட்டன்' என்கிற படம் காட்சிப் படுத்தி இருந்தது. குறிப்பாக வரிசை முறை, வேறுபாடுகளை ஏற்படுத்தி விடுகிறது. அதை மாற்றும் நோக்கத்துடன், அரை வட்ட வடிவில் மாணவர்களின் இருக்கைகள் அமைக்கப்படுவதை இந்தப் படம் வலியுறுத்தியது. இதையடுத்து, கேரளாவில் சில பள்ளிகளில் அந்த முறை செயல்படுத்திப் பார்க்கப்படுகிறது. அங்கு சோதனை முறையிலான முயற்சியை, தமிழ்நாட்டில் செயல்வடிவத்துக்குக் கொண்டு வருகிறது நமது பள்ளிக் கல்வித்துறை. மதிப்பெண் தர வரிசைமுறை மாற்றி, புரட்சி செய்த தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை வகுப்பறையிலும் புரட்சியை ஏற்படுத்தி உள்ளது என்றால் மிகையில்லை.

## ஃப்ளாஷ்பேக்



### இளமைக்கால கழகப் பணிகள்!



ம.சேசுராசு

நான் சிறு வயது முதலே கழகப்பற்றுடன் வளர்ந்தவன். மும்பை ஜவேரி பஜார் பகுதிக் கழகத்தின் செயலாளராகவும், மும்பை மாநில இளைஞர் அணி அமைப்பாளராகவும் 18 ஆண்டு காலம் பொறுப்பு வகித்துள்ளேன். 1994-ஆம் ஆண்டு, கழக நிகழ்ச்சிகளுக்காக மும்பை வந்த கழகத்தின் இனமானப் பேராசிரியர் மற்றும் மும்பை கழக முன்னோடி த.மு.பொற்கோ அவர்களுடன் நான் இடம்பெற்றுள்ள இந்தப் படம் என் இளமைக்கால நினைவுகளைத் தூண்டுகிறது.

**- ம.சேசுராசு,**
**முன்னாள் மாநில தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர்,**
**தலைவர் - கலைஞர் தமிழ்ச் சங்கம், மும்பை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## மருகு

### மொழிப்பற்று தவறானதா?

1959-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் சென்னை அண்ணாமலை மன்றத்தில் தென்னிந்திய சுருக்கெழுத்தாளர் சங்க நிகழ்ச்சியில் தமிழ்ப்பற்று குறித்து உரை நிகழ்த்தினார் அண்ணா. "தமிழ் மீது பற்றுக்கொண்டிருப்பது, பிறமொழி மீது துவேஷம் காட்டுவதாகாது. தன் குழந்தையை எடுத்து ஒரு தகப்பன் முத்தம் கொடுத்தால், அதனாலே பிற குழந்தை மீது துவேஷம் காட்டுவதாகக் கருதமுடியாது. பிறமொழி மீது துவேஷம் கூடாது என்று பேசுவது, தமிழுக்கு எதிர்ப்பு தேடுவதாகும். தமிழர்களின் தமிழ்ப் பற்றைக் கொஞ்சம் தடுத்து நிறுத்துவதாகும்" என்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131